**பேலியகொடை நகர சபை**
**கம்பஹா மாவட்டம்**

# 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 யூலை 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 செப்டம்பர் 18 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, பேலியகொடை நகர சபையின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 336,149 க்கான நூலகப் புத்தகங்கள் மூலதனமாக்கப்படவில்லை. | கையேற்கப்பட்ட மூலதனச் சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | தவறுதலாக கவனத்திற் கொள்ளப்படாது போயுள்ளது. 2020 இறுதிக் கணக்குகளின் மூலம் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | முகப்பு அலுவலகத்தின் நிர்மாண செலவாகிய ரூபா 377,339 மூலதனமாக்கப்படவில்லை. | நிர்மாண வேலைக்கான செலவினம் மூலதனமாக்கப்பட வேண்டும். | தவறுதலாக கவனத்திற் கொள்ளப்படாது போயுள்ளது. 2020 இறுதிக் கணக்குகளின் மூலம் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (இ) | மீளாய்வாண்டில் கைதவிர்ப்புச் செய்யப்பட்ட ரூபா 1,013,971 கிரயமுடைய 05 வாகனங்களும் 05 டிறெயிலர்களும் மோட்டார் வாகன மற்றும் வண்டிக் கணக்கிலிருந்து நீக்கப்படவில்லை. | கைதவிர்ப்புச் செய்யப்படும் மூலதனப் பொருட்கள் கணக்கிலிருந்து நீக்கப்பட வேண்டும். | தவறுதலாக கவனத்திற் கொள்ளப்படாது போயுள்ளது. 2020 இறுதிக் கணக்குகளின் மூலம் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பௌதீக கையிருப்பு மீதிக் கணக்கில் சீராக்கல் செய்யாது ரூபா 5,687,871 க்கான கையிருப்புப் பேரேட்டு மீதி கணக்கிலிடப்பட்டிருந்தது. | பௌதீக கையிருப்பு மீதி கணக்குகளில் பேணப்பட வேண்டும். | தற்போதுள்ள மாற்றங்களைத் திருத்தி பௌதீக கையிருப்பைக் கணக்கிலிட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

## 1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்

--------------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | --------------------------------------- | ------------------------ | ----------------------------- |
| (அ) | 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட 04 கணக்கீட்டு விடயங்களது மீதிக்கும் துணைப் பதிவேட்டு மீதிக்குமிடையே ரூபா 13,959,625 வேறுபாடு நிலவியது. | குறித்த மீதிகளது வேறுபாட்டை இணக்கம் செய்து கணக்கைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய கணக்கீட்டு விதிமுறைக்கமைய திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | செலவின விடயங்கள் 04 க்குரிய கணக்குகளில் காட்டப்பட்ட மீதிகளது கூட்டுத்தொகைக்கும் பட்டோலைக்கும் இடையே ரூபா 3,169,425 வேறுபாடு நிலவியது. | குறித்த மீதிகளது வேறுபாட்டை இணக்கம் செய்து கணக்கைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | செலவு தொடர்பாக சரிவர செலவினப் பதிவேடுகளில் காட்டப்பட்டபோதும், செலவினத் தலைப்பில் எஞ்சியவை, அதாவது, செலவின மீதிகள் சம்பந்தமாக தவறான பெறுமதிகளைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

## 1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | --------------------------------------- | ------------------------ | ----------------------------- |
| (அ) | பெற வேண்டிய கணக்குகள்<br>------------------------------------------------<br>தொடர்ச்சியாக நிலவி வரும் ரூபா 3,966,656 க்கான பெற வேண்டிய மூலதன வருமானத்தை இனங்கண்டு அதனைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெற வேண்டிய மற்றும் தகவல்கள் 10 ஆண்டுகளுக்கு கிடைக்காமையால் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளதுடன், 2020 ஆம் ஆண்டில் இம்மீதியை திரண்ட நிதியத்தில் சீராக்கல் செய்து கணக்கினை சாத்தியக்கூறு மிக்கதாக |

| | | |
|---|---|---|
| | | ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (ஆ) கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள் | | |
| மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான ரூபா 23,121,058 செலவினக் கடன் கொடுத்தோர் மீதியில் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவிவரும் ரூபா 9,013,500 மீதியும் 2017 தொடக்கம் நிலவிவரும் ரூபா 1,228.379 மீதியும் உள்ளடங்கியிருந்தன. அவற்றைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2014 ஆம் 2017 ஆம் ஆண்டுகளில் கடன் கொடுத்தோருக்கான நிதியேற்பாடு அதிகரித்தமையால் இக்கடன் கொடுத்தோர் மீதி ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டில் இம்மீதி சீராக்கப்படும். |

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான ஆவணச் சான்றின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பட்டோலையும் பங்குச் சான்றிதழும் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 5,170,666 கூட்டுத் தொகையுடைய 02 கணக்கீட்டு விடயங்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை. | கணக்கு மீதிகளை உறுதி செய்யும் தகவல்களைச் சமர்ப்பிக்க வேண்டும். | கடந்த காலத்திலிருந்தே நிலவிவரும் பேரேட்டுக் கணக்கு மீதி ஒன்றை எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இலங்கை மின்சார தனியார் கம்பனியின் இப்பங்குகள் சபைக்கு வழங்கப்பட்டுமுள்ளன. பங்குச் சான்றிதழின் பிரதிகள் பெறப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 807,413 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 22,875,793 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் வருவாய் நிலுவை என்பன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் நிலுவை வருவாய் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமானம் | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரிக்கப்பட்ட வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரிக்கப்பட்ட வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையும் வரியும் | 56,000 | 45,457 | 38,172 | 25,645 | 42,000 | 43,046 | 36,467 | 26,918 |
| (ii) | வாடகை | 932 | 1,862 | 62 | 3,963 | 110 | 1,265 | 278 | 997 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,800 | 1,956 | 1,919 | - | 1,400 | 1,427 | 1,421 | 6 |
| (iv) | ஏனைய வருமானம் | 115 | 507 | - | - | 30 | 353 | 10 | 343 |
| | | 58,847 | 49,782 | 40,153 | 29,608 | 43,540 | 46,091 | 38,176 | 28,264 |

## 2.2.2 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபை பொதுச் சந்தையில் வியாபார நடவடிக்கைகள் நடைபெறும் 06 கடைகள் சம்பந்தமாக உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படவில்லை. 01 கடையினது உடன்படிக்கைக் காலம் நிச்சயமாகக் குறிப்பிடப்படவில்லை. | கடைகளைக் குத்தகைக்கு வழங்கும்போது சகல நிபந்தனைகளும் அடங்கலாக உடன்படிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். | நகர சபை பொதுச் சந்தையில் வியாபார நடவடிக்கைகள் நடைபெறும் 04 கடைகளில் குத்தகையாளர்களது பெயர்கள் பதிவேட்டில் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றினது சட்டபூர்வத் தன்மையை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | நகர சபை பொதுச் சந்தையில் வியாபார நடவடிக்கைகள் நடைபெறும் 10 கடைகளது உடன்படிக்கைக் காலம் 1986 டிசம்பர் 31 இல் முடிவடைந்திருந்தபோதும், உடன்படிக்கையைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உடன் படிக்கையின் பிரகாரம் குத்தகை காலம் முடிவடைந்ததும் புதிய குத்தகை மேற்கொள்ளப் பட வேண்டும். | உள்ளூராட்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய குத்தகையாளரை அந்த உடன்படிக்கையில் சேர்த்துக் கொள்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |
| (இ) | பொதுச் சந்தையில் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள 28 கடைகளுக்கும் 2018 மே 01 தொடக்கம் | நிலுவை அறவிடப்பட வேண்டும். | இந்த 28 கடைகளிலும் 50 சதவீதம் அறவிடப்பட்டதானது அங்கு பொது வசதிகள் |

| | | |
|---|---|---|
| நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய மதிப்பீட்டின்படி 2019 டிசம்பர் 31 தொடக்கம் 50 சதவீதம் அறவிடப்படவில்லை. | | தயாரிக்கப்படும் வரை மாத்திரமே. நிலுவையாக உள்ள 50 சதவீதத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை அறிவிக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வேலைக் களத் தொழிலாளர் பதவிகள் 18 ஆகும். இதில் 16 நிறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டின்போது களத் தொழிலாளர்களைப் பயன்படுத்தி பராமரிப்பு வேலைகள் எதுவும் நடைபெறவில்லை. இந்த 16 தொழிலாளர்களில் 09 பேர் வேறு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எஞ்சிய 07 பேரும் எப்பணிகளிலும் ஈடுபடுத்தப்படவில்லை. | வேலைக் களத் தொழிலாளர் களுக்கு குறித்த அதிகாரிகள் நாளாந்தக் கடமைகளை ஒப்படைத்து அவர்களை அதில் ஈடுபடுத்த வேண்டும். | பராமரிப்புக் கூறு ஒன்று நிறுவப்படவுள்ளது. அதுவரை வீதித் தொழிலாளர்களை முறையாகத் தயாரிக்கப்பட்ட திட்டத்தின்படி 2020 யூலை 01 தொடக்கம் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்பதை அறிவிக்கின்றேன். |

### 3.2 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பேலியகொடை நீர்கொழும்பு வீதியில் 171 ஆம் இலக்க இடம் சட்டவிரோதமாகத் தகர்க்கப்பட்டு பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன எனத் தெரிவித்து சபைக்கும் தலைவருக்கும் எதிராக தனிநபர்களால் ரூபா 20 இலட்சம் இழப்பீடு கோரி 2010 மார்ச் 03 ஆந் திகதியன்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதற்கான வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 112,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கட்டணம் செலுத்தப்படாமையால் 3 வழக்கறிஞர்கள் வழக்கிலிருந்து விலகியிருந்தனர். இறுதியாகஇருந்த வழக்கறிஞரும் வழக்கிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தார். எனினும், இவ்வழக்கு தீர்வு செய்யப்பட்டது புலனாகவில்லை. | உருவாகி உள்ள வழக்கு தீர்வு செய்யப் படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் வழக்கறிஞர் கட்டணம் ஆக்கபூர்வமாகச் செலவழிய வேண்டும். | வழக்கு தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் பின்னர் எதுவித அழைப்பாணையும் கிடைக்காமையால் புதிய வழக்கறிஞரை ஏற்பாடு செய்வதற்குச் சபை நடவடிக்கை எடுக்கவில்லை என அறிவிக்கின்றேன். |

### 3.3 சொத்து முகாமைத்துவம்

#### 3.3.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பொது நிர்வாகம், உள்ளூராட்சி, சனநாயக நிர்வாகம் தொடர்பான அமைச்சிடமிருந்து 2015 ஜூலை 02 திகதி சபைக்கு கிடைக்கப்பெற்ற ரூபா 17,649,179 பெறுமதியான பெக்கோ இயந்திரம் அத்தினம் முதலாக பயன்படுத்தப்படாது நகர சபை வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தது. எனினும், அந்நாள் தொடக்கம் 2019 டிசெம்பர் 31 வரை காப்புறுதி செய்தல், கழுவுதல், மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 340,861 செலவிடப்பட்டிருந்தது. | வினைத் திறனுடன் பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வேறொரு நிறுவனத்திற்கு வழங்குவதற்கு சபையின் அங்கீகாரம் பெறப்படாததால் பயன்படுத்தப்படாது இருந்ததாக அறிவிக்கின்றேன். |
| (ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவத்துக்கு பயன்படுத்தப்படும் 03 டிறக்டர்கள் 2020 சனவரி 27 முதல் செயலற்றிருந்தன. | செயலற்ற வாகனங்களைப் பழுதுபார்த்து பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்சமயம் பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கின்றேன். |

### 3.4 பொருட் கொள்வனவு

#### 3.4.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018, 2019 ஆம் ஆண்டுகளில் பக்கினிகஹபில்லேவ பிரதேசத்தில் 08 வீதிகளில் 1553.29 அடி மொத்த நீளத்திற்கு கொங்கிறீட் பதிப்பதற்கு செலவான தொகை ரூபா 2,858,399 ஆகும். பயன்படுத்திய ரெடிமிக்ஸினது அளவு $133.76m^3$ ஆகும். மதிப்பீட்டின் படி கொங்கிறீட் தளத்தின் கனஅளவு 04 அங்குலமாக இருக்க வேண்டும். எனினும், குறுக்காக வெட்டி 05 இடங்களில் பெறப்பட்ட அளவுகளின் பிரகாரம் கன அளவு 2.75 க்கும் 3.5 க்கும் இடைப்பட்டதாக இருந்தது. அதற்கமைய, 27.86 கனமீட்டர் கொங்கிறீட்டின் பொருட்டு கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா 445,202 ஆகும். | வீதியை நிர்மாணிக்கும் போது கொங்கிறீட் தளத்தின் கனஅளவு தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு நிர்மாண வேலைக்கும் வெவ்வேறு கோவைகள் பேணப்பட வேண்டும். | 2019 க்கு முன்னரான ஆண்டுகளின்போது மேற்கொள்ளப்பட்ட வீதிச் செயற்திட்ட கோவைகளுடன் தொடர்புடையதாக வீதியின் குறிப்பான இடத்தை இனங்காண்பதில் வசதி இன்மை உள்ளது. கொங்கிறீட் தளத்தின் கன அளவு 4'' அளவில் உள்ளபோதும் பல்வேறு வசதிஇன்மை காரணமாக கொங்கிறீட்டை பரவுவது குறித்த மட்டத்தில் அமையாது போகலாம். எனினும், மதிப்பீட்டில் உள்ளவாறு குறித்த இடத்தில் கொங்கிறீட் பரவப்பட்டுள்ளது என்பதை அறிவிக்கின்றேன். |